NOVEMBER/DECEMBER 2025

FTA51/CTA51 — இலக்கியம் 5 - சங்க இலக்கியம்
(அகம்)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

1. நற்றிணையில் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?

2. நின்ற சொல்லர் நீடு தோன்று இனியர் எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் யார்?

3. குறந்தொகையைத் தொகுத்தவர் யார்?

4. குருதிப் பூ எனச் சுட்டப்படுவது யாது?



5. பாலைக் கலியைப் பாடியவர் யார்?

6. மருதக்கலியைப் பாடியவர் யார்?

7. அகநானூற்றின் பாகுபாடுகள் யாவை?

8. களிற்றியானை நிரை பெயர்க்காரணம் தருக.

9. நெடுநல்வாடை யாரால் யார் மீது பாடப்பட்டது?

10. புனையா ஓவியம் போல இருந்தவள் யார்?

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

11. (அ) நற்றிணையில் கண்டோர் கூற்றை நும் பாடப்பகுதி வழி நின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) நாணும் விட்டே அலர்க இவ்வூரே இடஞ்சுட்டி விளக்குக.

12. (அ) உயரி தவச்சிறிது காமமோ பெரிது - நிறுவுக.

(அல்லது)

(ஆ) மடலேறும் திறத்தை குறுத்தொகை வழி விளக்குக.

13. (அ) எந்நாளோ நெடுந்தகாய்!-இடஞ்சுட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) கற்றறிந்தார் ஏத்தும் கலி- குறிப்பு வரைக.


14. (அ) கல்போல் பிரியலம் - இடஞ்சுட்டி விளக்குக.

(அல்லது)

(ஆ) தேரை விட விரைந்து சென்ற நெஞ்சம் குறித்து அகநானூறு கூறும் செய்தியை எடுத்துரைக்க.

15. (அ) மாலைக் கால வழிபாட்டை நெடுநல்வாடை வழி நின்று விளக்குக.

(அல்லது)



(ஆ) ஆடவர் அணுகா அந்தப்புரம் பற்றி நெடுநல்வாடை தரும் செய்திகளை விளக்குக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்

16. நற்றிணையில் தலைவன் நெஞ்சிற்குச் சொல்லியதை நும் பாடப்பகுதி வழி நின்று விவரிக்க.

17. பாலை நிலப்பான்மையைக் குறுந்தொகை வழி நின்று ஆராய்க.

18. காமக்கிழத்தியின் இயல்பை மருதக்கலி வழிநின்று நிறுவுக.

19. செவிலித்தாயின் நிலையை அகநானூற்றின் வழி நின்று விளக்குக.

20. நெடுநல்வாடை காட்டும் அரண்மனையின் அழகை விவரிக்க.
